REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5565

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 1உ செவ்வாய் (18—10—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 2உ புதன் (19—10—55) [இதழ் 107

நொண்டி வேடத்தில் திருடன்!

'நொண்டிப் பிச்சைக்காரன்' வேடத்திலிருந்த திருடன் ஒருவன் கொல்லத்தில் பிடிபட்டிருக்கின்றானாம்.

காலில் காயம் ஏதும் இல்லாத நிலையில் அவன் பெரிய கட்டு ஒன்று போட்டுக்கொண்டு, நொண்டி நொண்டி நடந்துகொண்டிருந்தானாம். கடை வீதி ஒன்றில் சுற்றிக்கொண்டிருந்த அவனைச் சந்தேகித்து சோதித்ததில் காலில் அவன் கட்டியிருந்த கட்டிற்குள் ஒரு தங்க மோதிரமும், இரண்டு விலையுயர்ந்த கைக்கடிகாரங்களும் இருந்தனவாம். 26 வயதான செண்பகத்தேவன் என்ற செங்கோட்டையைச் சேர்ந்த அந்தத் திருடன் போலீசார் வசம் ஒப்புவிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

முத்தமிழ் வளர்த்த மதுரையில் இந்திப் பல்கலைக்கழகமா?

இந்தியைப் பரப்ப வடவர் ஏற்பாடு?

'ஏக இந்தியா' நிலைக்க மேற்கொள்ளப்படும் சதி?

புதுடில்லி, அக். 16—

முத்தமிழ்ச் சங்கம் நிறுவி முக்கலை வளர்த்த பாண்டிய நாட்டுத் தலைநகர் மதுரைமாநகர்.

அந்தத் தமிழ் வளர்த்த பெருமைக்குரிய நகரில் இந்தி போதிக்கும் மத்திய பல்கலைக் கழகம் ஒன்று நிறுவ, வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் திட்டமிடுவதாகத் தெரியவருகிறது.

மாநிலக் குழுவினர், 'தென்னாட்டில் ஒரு மத்திய பல்கலைக் கழகம் நிறுவவேண்டும்' என்றும், 'அந்தப் பல்கலைக் கழகத்தில் போதனு மொழியாக இந்தி மொழி இருக்கவேண்டும்' என்றும் சிபாரிசு செய்திருப்பதை ஒட்டி அந்தச் சிபாரிசை ஏற்றுக்கொண்டு, 'மதுரையில் அந்த பல்கலைக் கழகத்தை நிறுவவேண்டும்' என, இந்தி வெறியேறிய வடநாட்டுத் தலைவர்கள் சிலரும், பத்திரிகைகள் சிலவும், யோசனை கூறுவதாகத் தெரியவருகிறது.

ஐதராபாத்தில் உள்ள உஸ்மானியா பல்கலைக் கழகத்தை, தென்னாட்டில் இந்தி மொழியைப் பரப்புவதற்காக, மத்திய பல்கலைக் கழகமாக்க வேண்டுமென ஏற்கனவே இந்தியப் பேரரசு தீவிரமாக முயற்சித்து வருவதால், மதுரையிலும் ஒரு இந்திப் பல்கலைக் கழகம் அமையும் என்று வெளிவரும் தகவல்களை ஆதாரமற்றவை என்று கூறித் தள்ளிவிடுவதற்கில்லை

இந்தியாவின் ஒற்றுமை—ஐக்கியம் என்ற போர்வையில், வடநாட்டுத் தலைவர்கள், தென்னாட்டை—திராவிடத்தைத் தொடர்ந்து தங்களின் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க மேற்கொண்டுள்ள பயங்கரமான சதிகளில், இதுவும் ஒன்றாகவே இருக்கக்கூடும்.

'வேலியிட்டு வேதனை தரும் நிலை கூடாது'

'சாணக்கியத் தந்திரங்கள் தகர்ந்துவிடும்'

சென்னை சிறப்புக் கூட்டத்தில் என். வி. நடராசன்

"ஆங்கில ஏகாதிபத்தியம்—பிரிட்டிஷாரின் ஆதிக்க ஆட்சி இங்கு அரசு செலுத்தியபோது இருந்த பிரச்சினையே, 'மாநிலங்களை மொழிவாரி அடிப்படையில் பிரிக்க வேண்டும்' என்பதுதான்; அவர்கள், தங்கள் ஆதிக்கப் பிடிப்பை விட்டு அகன்ற பின்னர், மொழிவாரி அடிப்படையிலேயே ஆந்திரம் முதன் முதலாக அமைந்தது; ஆனால், தமிழ், மலையாள, கன்னட, மராட்டிய, பஞ்சாப் மாநிலங்கள்—மொழி அடிப்படையில் இன்னும் அமையவில்லை; ஆங்காங்கே உள்ள மக்கள், தங்கள் தங்கள் உரிமைக் குரலை—மொழிவழி மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பிக்கொண்டே இருக்கின்றனர்; மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினரோ, எவரையும் திருப்திப்படுத்தாத முறையில் அந்தந்த மக்களது கோரிக்கையை ஏற்று அவைகளுக்கு ஏற்ற முக்கியத்துவம் கொடுக்கத் தவறிவிட்டனர்; அவ்வாறு செய்திருந்தும்கூடத்தான் சொல்கிறார்கள்—'எல்லோரையும் திருப்திப்படுத்தும் வகையிலேயே சிபாரிசு செய்துள்ளோம்'—என்று!

"மாநில புனரமைப்புக் குழு, மக்களுக்கு—தென்னாட்டவருக்கு மகத்தான துரோகத்தை இழைத்துவிட்டிருக்கிறது;

"நாம், 'திராவிட நாடு வேண்டும்' என்று கேட்கிறோம்;—அது, நமது இலட்சியக் கோரிக்கை; இந்தக் கோரிக்கையை நாம், தி. மு. கழகத்தவர்களாக இருக்கிற இப்போதுமட்டுமல்ல கேட்பது; திராவிடக் கழகத்திற்கு முன்னாலேயே—கடந்த 1916-ம் ஆண்டிலே டாக்டர் நாயர் போன்ற பெரும் பெருந் தலைவர்கள் தோன்றிய அந்தக் காலந்தொட்டே கேட்டு வருகிறோம்; அந்தக் கோரிக்கையைத்தான் இன்றும், நாம்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாயிலாகக் கேட்டும், தெரிவித்தும் வருகிறோம்; வடநாட்டு ஆதிக்கபுரியினரின் அடிமைத் தளையினின்றும் விடுபட்டு வாழ வேண்டுமென்று விரும்புகிறோம்;

"கேரள மாநிலத்தில் அடங்கியிருக்கும் 9 தமிழ் தாலுகாக்களையும் தமிழகத்துடன் இணைக்கவேண்டுமென்று நாம் கோரினோம்—கோருகிறோம்—அங்குள்ள மக்களும் இந்தக் கோரிக்கையைத் தெரிவித்துவிட்டார்கள்; இதற்கெனப் போராட்டங்களும் நடைபெற்றன—நாமும் கலந்துகொண்டோம்; இவையெல்லாம் நடைபெற்றிருந்துங்கூட, மாநில புனரமைப்புக் குழு அவற்றை அலட்சியம் செய்துவிட்டு அங்குள்ள நிலைமைகளை ஊன்றிக் கவனிக்காமல், 5 தாலுகாக்களை மட்டுமே தமிழகத்துடன் சேரச் சிபாரிசு செய்கிறது; இதன் மூலம் வடநாட்டு சர்க்காரின் தந்திரமான போக்கு நமக்கு வெளிப்பட்டுவிட்டது; விட்டுப்போன 4 தாலுகாக்களுக்காக இனிமேல் மலையாளிகளுக்கும்—தமிழர்களுக்குமிடையே சச்சரவுகளையும்—போராட்டத்தையும் இந்தக் குழு மூட்டிவிட்டிருக்கிறது என்பதை நாம்—தமிழரும், மலையாளிகளும் நன்குக உணர்ந்தாகவேண்டும்;

"மாநிலப் புனரமைப்புக் குழு, மொழிவழியாக மாநிலங்களைத் திருத்வேண்டும் என்ற அடிப்படையிலாவது, அல்லது பொருளாதார நிலைக்கேற்பவாறாவது, அல்லது நிர்வாக வசதியை கவனத்தில் கொண்டு அதன் அடிப்படையிலாவது மாநிலங்களைத் திருத்தி அமைத்திருக்க வேண்டும்; ஆனால், அவ்வாறு செய்யவில்லை; சிற்சில இடங்களிலே மொழியையும், மற்றும் சில இடங்களில் பொருளாதார நிலையையும், வேறு சில இடங்களில் நிர்வாக வசதியையும்தான் கருதியிருக்கிறது; இவ்வாறு செய்துள்ளதானது உண்மையிலேயே 'மாநிலங்களைத் திருத்தி அமைக்கவேண்டும்—அந்தந்த மக்களின் உரிமைக் குரலுக்கு மதிப்பளிக்கவேண்டும்' என்ற எண்ணம் இல்லாமல், இந்திய யூனியனின் அமைப்பைப் பலப்படுத்துவதற்குத் தேவையான ஒரு வேலி போலத்தான் செய்திருக்கிறார்கள்."

—இவ்வாறு, தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் அவர்கள் 16—10—55ல், சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

(2-ம் பக்கம் பார்க்கவும்)

திருத்தம்

நேற்றைய இதழில் வெளிவந்த, புது மாநில அமைப்புத் திட்டம் பற்றிய தி. மு. கழகப் பொதுச் செயலாளரின் அறிக்கையை கீழ்க்கண்டவாறு திருத்தி வாசித்துக் கொள்க:—

(1) 20-வது 'பாரா'வில், கடைசி வரியில், 'இவைகளைக் கவனிக்காதது பெருந் தவறாகும்' என்றிருப்பதை, 'இவைகளை முழுவதுமாகக் கவனிக்காதது பெருந்தவறாகும்' என்று வாசித்துக் கோள்க.

(2) 21-வது 'பாரா'வில், 4-வது வரியில், 'பசில் குழு அறிக்கையில்' என்று துவங்குவது முதல் 'பேசப்படும் பகுதிகள்' என்பதுவரை உள்ள வாக்கியங்களுக்குப் பதிலாக, 'பசில் குழு அறிக்கையில் கண்டபடி, பிரிக்கப்படும் கன்னட, மராட்டியப் பகுதிகள் நீங்கலாக, எஞ்சிய தெலுங்குப் பகுதிகள்' என்பவற்றை ஈடு செய்து வாசித்துக்கொள்க.

—ஆசிரியர்

'துவக்கப் பள்ளிகளில் இந்தி மொழிக்கு இடம் கூடாது'

சென்னை, அக். 17—

'துவக்கப் பள்ளிகளில் இந்தி இடம் பெறக்கூடாது' என, ஆரம்பக் கல்விக் குழுவினர் செய்துள்ள சிபாரிசுகளில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கடந்த ஞாயிறன்று மீண்டும் கூடிய குழுவினர், தங்கள் சிபாரிசுகளில் சில திருத்தங்களைச் செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்தி மொழி ஒரு இஷ்ட பாடமாகக்கூட உயர்தர ஆரம்பக் கல்வி நிலையிலோ, ஆரம்பக் கல்வி நிலையிலோ இருக்கத் தேவை இல்லை என்றும், அந்தக் கல்வி பெறும் சிறார்கள், இந்தியப் பேரரசின் அலுவல் மொழி அறிவு பெற்றிருக்க வேண்டுவது அவசியமில்லை என்றும், எனவே, பாடத் திட்டத்தில் இந்தி இடம் பெற வேண்டாம் என்றும், அவர்கள் கருத்தறிவித்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

குழுவினரின் சிபாரிசுகளை ஒட்டி எழும் பொருளாதாரச் சிக்கல்கள் குறித்து இன்னமும் கணக்கிடவில்லை என்றாலும், சிபாரிசுகள் வரும் பள்ளி ஆண்டிலிருந்து அமுல் செய்யப்படக்கூடும் என்று நம்பப்படுகிறதாம்.

ஏன்? எதற்காக?

பெல்காம், அக் 17—

சுமார் 1,200 போர்ச்சுகல் படையினர், போர்ச்சுகல் நாட்டிலிருந்து இந்த வாரத்தில், கோவாவுக்கு வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

பக்ரா-நங்கல் பண மோசடி

பஞ்சாப் போலீசார் தீவிர சோதனை

குருக்ஷேத்திரம்—

பக்ரா நங்கல் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டிருந்த பணத்தையும், வாங்கப்பட்டிருந்த பொருள்களையும் பெரும் அளவில் மோசடி செய்திருப்பதாக ஏற்கனவே வெளிவந்த செய்திகளை ஒட்டி, இப்போது பல இடங்களை போலீசார் சோதனையிட்டது பற்றிய செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன.

பஞ்சாப் தனி போலீசார், குருக்ஷேத்திரம், ஷஹாபாத் ஜான்சா, பாடியாலா, நங்கல் முதலிய முதலிய நகரங்களில், 40-க்கும் மேற்பட்ட இடங்களைச் சோதனையிட்டிருக்கின்றனர்.

நிர்வாக எஞ்சினீயர், துணைப் பிரிவு அதிகாரிகள், திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் 'காண்டிராக்டர்கள்' ஆகியோரது அலுவலகங்கள் சோதனையிடப்பட்டிருக்கின்றன.

ஜோதிசர் பிரிவு அதிகாரியின் இல்லம் சோதனையிடப்பட்டு சுமார் ரூ 10,000 பெறுமானமுள்ள சாமான்கள் 'சீல்' வைக்கப்பட்டிருக்கின்றன

இலட்ச ரூபாய் வரை செலவில் நிறைவேறி வரும் இந்தப் பகுதி வேலைத் திட்டத்தில் இந்த அதிகாரி பல பொய்யான கணக்குகளைத் தயாரித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது

பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

வேலையே செய்யாத பலருக்கும், குருக்ஷேத்திரத்திலேயோ, அல்லது திட்டப் பகுதியிலேயோ எங்கும், எப்போதும் வசிக்காத—முன் பின் தெரியாதோருக்கும் சம்பளம் தரப்பட்டதாக சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஜோதிசர் பகுதியில் வேலை செய்த திரிலோக் சிங் என்பவர், தமக்கு, தனது சகாக்கள் மோசடி செய்த தொகையில் சரியான பங்கு தரவில்லை என்பதற்காகச் சண்டை போட்டுக் கொண்டதாயும், அதன் பேரில் அவர், கடந்த ஆண்டு ஜூலைத் திங்கள் 5-ந் தேதியன்று, நிலைகளைக் குறித்து போலீசாருக்குத் தகவல் தந்ததாகவும் கூறப்படுகிறது.

இதுவரையில் 30 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்; மேலும் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறதாம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18-10-'55 செவ்வாய்

மாநில புது அமைப்புத் திட்டம்

★

இந்தியத் துணைக்கண்டத்தின் மாநில எல்லைக் கோடுகளைத் திருத்தி அமைப்பதற்காக, இந்தியப் பேரரசு இருபத்திரண்டு திங்களுக்கு முன் நியமித்த மாநில புது அமைப்புக் குழுவினர் தாக்கல் செய்த—தங்களின் சிபாரிசுகளடங்கிய அறிக்கை, கடந்த கிழமை தவக்கத்தில் வெளியாகியிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த சிறப்பான நிகழ்ச்சி என்று வர்ணிக்கப்படும் மாநில புது அமைப்பு குறித்த குழுவினரின் திட்டம் வெளியானதைத் தொடர்ந்து, துணைக்கண்டம் முழுவதும் பரபரப்படைந்திருப்பது பற்றிய செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம், இந்த மாநில புது அமைப்புத் திட்டம் குறித்துத் தனது கருத்தை, பொதுச்செயலாளரின் தெளிவான அறிக்கையின் மூலம் விளக்கியிருக்கிறது.

'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற நமது விடுதலை முழக்கம் கேட்டுக் கலக்கமுற்று, நடுங்கிக் கிடக்கும் இந்தியப் பேரரசும், அவர்களின் எடுபிடிகளாயுள்ள தென்னாட்டு மாநில ஆட்சியாளர்களும், ஏனைய அரசியல் கட்சியினரும், நமது கருத்தை ஊன்றிக் கவனிப்பர் என்றும், திராவிட மக்கள், கழகம் தெரிவித்துள்ள கருத்தினைக் கவலையோடு கவனித்துப் பயன்பெற வேண்டும் என்று விழைகின்றோம்.

'தென்னாட்டை—திராவிடத்தைப் பொறுத்தமட்டில் எழுந்துள்ள—எழுகின்ற அரசியல், பொருளாதார, சமுதாயத் துறைச் சிக்கல்களுக்கு, அகில இந்திய அடிப்படையில் தேடப்படும் எந்த ஒரு பரிகாரமும் நிச்சயம் உருவான பலன்களைத் தரமுடியாது' என்று நாம் கூறிவரும் பொதுவான விளக்கம், கடந்த கால நடைமுறையில் தெளிவான உண்மையென நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்த உண்மையை, தென்னாட்டில் மிகப் பலம் பொருந்திய அரசியல் கட்சியினர் என்ற வகையில் நாம், மாநிலக் குழுவினருக்கு, அவர்களைச் சந்தித்தபோது உணர்த்தியிருக்கிறோம். இந்த உண்மையின் அடிப்படையிலிருந்து அல்லாது, நாம் வேறுவகையான நோக்கு கொண்டு — தென்னாட்டைப் பொறுத்தவரையில்— குழுவினரின் திட்டத்தை பார்ப்பதற்கு இல்லை.

'நம்மிடத்தில், உள்ள உணர்வுபூர்வமான ஒற்றுமை இல்லை; நம்மிடம் இருப்பதெல்லாம் ஆட்டவும் அசைக்கவும் முடியாத பலம் மிகுந்த மத்திய ஆட்சிதான்; அதைக் கொண்டே நாம இந்தியாவின் அரசியல் ஒற்றுமையை நிலைநாட்டி வருகிறோம்,' என்று கூறும் பண்டித நேருவும், அவரது வடநாட்டு சகாக்களும், வெள்ளையரது துப்பாக்கி முனையின் வலிமையினால் உருவாக்கப்பட்ட அந்த 'அரசியல் ஒற்றுமை'யை—'ஏக இந்திய' அரசியல் அமைப்பை, 'என்றென்றைக்கும் நிலைநாட்ட எங்களது முழு ஆற்றலையும் பயன்படுத்தத் தவறமாட்டோம்—'இந்தியா'வை இனிமேலும் துண்டாட அனுமதிக்கமாட்டோம்' என்று கொக்கரிக்கும் ஏகாதிபத்தியவாதிகளாயிருக்கின்றனர்.

இந்தப் புதிய ஏகாதிபத்தியவாதிகள், துணைக்கண்டத்து மாநில எல்லைக்கோடுகளைத் திருத்தி அமைப்பதற்கென ஒரு குழுவை நியமித்தபோதே, 'ஏக இந்திய' அரசியல் அமைப்பின் 'ஒற்றுமை'க்குக் குந்தகம் விளைவிக்காத வகையில் சிபாரிசுகளைச் செய்ய வேண்டும் என்று மறைமுகமான கட்டளை விதித்திருந்தனர்.

குழுவினரும் தங்கள் சிபாரிசுகளைப் பற்றிக் கருத்தறிவிக்கையில், தாங்கள் 'இந்தியா'வின் 'ஐக்கிய'த்தையும், 'ஒற்றுமை'யையும் மனதில் கொண்டே சிபாரிசுகளை செய்திருப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

இல்லாத 'ஒற்றுமை'க்கு வழிகோலும் குழுவினரிடமிருந்து, திராவிடரின் கோரிக்கைகளுக்கு நியாயம் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை; ஆனால், 'இந்திய யூனியன்' என்ற ஏகாதிபத்திய அரசியல் அமைப்பில் திராவிடம் இணைக்கப்பட்டிருக்கும் கொடூர அடிமை நிலை இன்னமும் அகலவில்லை என்ற 'பாப'மும்தான், குழுவினரிடத்தில், தி. மு. கழகம் தனது இலட்சியத்தையும், கருத்தையும அறிவிக்க வேண்டிய காரணங்களுள் ஒன்றாக இருந்தது.

மொழிவழி மாநில அமைப்பு என்ற கோட்பாட்டினை, தி. மு. கழகம், தான் தோன்றிய நாள் முதல் கொண்டிருப்பதாலும், தென்னாட்டைப் பொறுத்த மட்டில் மொழிவழியாக மாநிலங்கள் அமைவது, திராவிடரின் விடுதலைப் பயணத்தின் ஒரு முன்னேற்றப்படியாக இருக்கும் என்று கழகம் கருதுவதும் குழுவிடம் கருத்தறிவித்ததற்குரிய மற்றொரு முக்கிய காரணமாகும்.

இந்தக் காரணங்களுடன், நாம் தென்னாட்டைப் பொறுத்த வரையில் திருத்தி அமைக்கப்பட வேண்டிய மாநில எல்லைகள் என்று தெரிவித்திருந்த கோரிக்கைகள் குறித்துக் குழுவினர் செய்துள்ள சிபாரிசுகள், நம்மையும் தொடர்புடைய மக்களையும் திருப்திப்படுத்துவதாக இல்லை—நமக்கு நியாயம வழங்கவில்லை என்பதைப் பொதுச் செயலாளர் அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது.

துணைப்பொதுச்செயலாளர் விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது :—

"தேவிகுளம, பீர்மேடு, செய்யாற்றங்கரை ஆகிய தமிழ்ப் பகுதிகளை கண்டிப்பாகத் தமிழ் நாட்டுடன் சேர்த்தே ஆகவேண்டும்; இதற்காக நாம்—தி. மு. கழகத்தவர், நேர்மை வழிநின்று, நியாயமான முறையில் போராட்டம் நடத்தியே தீருவோம்; இந்தத் தாலுகாக்களைத் தமிழகத்துடன் சேர்க்கவேண்டும் என்று மாற்றுக் கட்சியினர் எவர் போராட முன்வந்தாலும் நிச்சயம் நாம் அவர்களுக்கு நமது ஆதரவையும் தருவதற்குப் பின்வாங்கமாட்டோம்;

'தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் பற்றியபிரச்சினையில் குழு, கேரளத்தவருக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறியிருக்கிறது; இதைப் பற்றி இந்தியப் பிரதமர் உணரவேயில்லை; இதற்கு அவர் எதுவுமே தெரிவிக்கவில்லை; ஆனால், அவரது சொந்த மாநிலமான உத்திரப் பிரதேசத்திலோ எந்தவிதமான மாறுதலும் இல்லை; உத்திரப் பிரதேசத்தைப் பிரிப்பதற்கான முகாந்திரம் எதுவுமில்லை; எனவே, அது இப்போதிருக்கிறபடியே மேலும் தொடர்ந்து இருந்துவரவேண்டுமென்று குழு சிபாரிசும் செய்திருக்கிறது; குழுவின் சிபாரிசுகளின்படி உருவாக்கப்படவிருக்கிற 16 மாநிலங்களிலும் மிகப் பெரியது உத்திரப் பிரதேசம் என்பதால்!

"நாம் திராவிடநாடு வேண்டுமென்கிறோம்; நாம் 'திராவிடநாடு' என்று குறிப்பிடும்போது, தமிழகம்—கேரளம்— ஆந்திரம்—கன்னடம் ஆகிய நான்கு மொழி மாநிலங்களையும் கொண்ட ஒரு கூட்டாட்சியைக் கொண்டதாகவே இருக்க வேண்டுமென்றுதான் கூறுகிறோமே தவிர, — அவைகள் அனைத்தும் மொழிவழி பிரிந்து, இனவழி ஒன்றுபட்ட கூட்டரசின்கீழ் இருக்கவேண்டுமென்றுதான் வலியுறுத்துகிறோமே தவிர, தமிழகம்—கேரளம்-ஆந்திரம்—கன்னடம் ஆகிய நான்கு மாநிலங்களையும் ஒன்றாக இணைத்துத் திராவிட நாடாக்க வேண்டுமென்று கூறவில்லை; அந்த முறையிலே நம்மைப் பொறுத்த வரையில் — தமிழர்களைப் பொறுத்தவரையில், நமக்கு என்னென்ன தேவையோ அதற்காகப் போராடுவோம்; அந்த முறையிலே இன்று தமிழ் மக்களுக்காக — தமிழர்களின் நன்மைக்காகப் பாடுபடுவதாக ஒரு இயக்கம் இருக்கிறதென்றால், அது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றே என்று நிச்சயமாகக் கூறுவோம். 'திராவிடம் அமைப்பதுதான் எங்களது இலட்சியம் — குறிக்கோள்' என்று கூறுகிற நாங்கள், தமிழர்களுக்கு இருக்கவேண்டிய உரிமையைப் புறக்கணிக்கவும் மாட்டோம்; தமிழகத்தின் எந்த ஒரு பகுதியையாகிலும் ஆந்திரருக்கோ, கேரளருக்கோ, அல்லது கன்னடியருக்கோ 'தானம்' செய்துவிட மாட்டோம்; அப்படி, தமிழர்களுக்கு இருக்கவேண்டிய பகுதிகளை மற்றவர்கள் கைகளில் ஒப்புவித்துவிடவும் மாட்டோம்;

"'ஐக்கிய கேரளம்' அமையவேண்டுமென்று கேரள மக்கள் குரல் எழுப்புகின்றனர்—வரவேற்கிறோம்—மனதார! 'விசால ஆந்திரம் தேவை' என்று ஆந்திரர்கள் கோருகின்றனர் — அதையும் வரவேற்கிறோம்—முழு மனதுடன்! 'ஐக்கிய கர்நாடகம் கொடுங்கள்' என்று குரல் எழுப்புகின்றனர் கன்னடியர்-ஒப்புக்கொள்கிறோம்; இவற்றைப் பெறச் செய்வதற்கான எந்த போராட்டத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தனது ஒத்துழைப்பையும், ஆதரவையும் தருவதற்குத் தயாராக இருக்கிறது; ஆனால், அந்தந்த மாநிலத்திற்கு உரிமையானதை மற்றவைகளுக்குக் கொடுக்கச் சம்மதிக்கமாட்டோம்; இதை, 'தமிழ் நாட்டுக்காகப் பாடுபடுகிறோம்' என்று கூறிக்கொண்டிருக்கிற மாற்றுக் கட்சி அன்பர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்;

"அண்மையில், நமது முதலமைச்சர் காமராசர் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில்கூட கூறியிருக்கிறார்:— 'எக்காரணத்தைக் கொண்டும் தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களை தமிழகத்துடன் இணைத்தே தீரவேண்டும்; அதற்கான சகல வழிகளையும் நானே கவனித்துக் கொள்வேன்'— என்று! தேவிகுளம், பீர்மேடு பிரச்சினைகளை மட்டுமல்ல—வடக்கெல்லையிலுள்ள சித்தூர், திருத்தணி போன்ற பகுதிகள் குறித்த பிரச்சினைகளையும் தாமாகவே முன்னின்று தீர்த்துக்கொள்ளப் போவதாகவும் கூறியிருக்கிறார்; நல்லதுதான்; ஆனால், அதை எப்படி சாதிக்கப்போகிறார் என்றுதான் நமக்குப் புரியவில்லை;

"நம்மிடையே — தமிழர், தெலுங்கர், கேரளர், கன்னடியர் ஆகியோரிடையே—உள்ள தகராறுகளை நாமே சுலபமாகத் தீர்த்துக்கொள்ளலாம்: அந்த முறையில் தேவிகுளம், பீர்மேடு, சித்தூர், திருத்தணி ஆகியவை பற்றிய தகராறுகளைத் தாமே தீர்த்துக்கொள்ளப் போவதாக காமராசர் தெரிவித்திருப்பதை நாமும் வரவேற்கத்தான் செய்கிறோம்;

"சித்தூர் பிரச்சினை பற்றி ஆந்திரத் துணை முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி குறிப்பிட்டிருக்கிறார்—'சென்னை மாநிலத்திற்குச் சேரவேண்டிய பிரதேசத்தை, ஆந்திரா மகிழ்ச்சியுடன் கொடுத்துவிடும்; எந்த இடத்தையும் பலாத்காரமாகவோ, நிர்ப்பந்தமாகவோ வைத்திருக்கமாட்டோம்; இது விஷயத்தில் இரு சர்க்கார்களும் கூடிப் பேசிய பின், அவர்கள் செய்யும் முடிவை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்'—என்று; அவர் கூறியிருப்பதை நாமும் வரவேற்கிறோம்; நம்மிடையே இருக்கும் தகராறுகளை நாமே தீர்த்துக் கொள்வோம்; அமைச்சர் இப்படி சொல்லியிருக்கிறார்; ஆனால், அந்த உறுதி, வெறும் ஏட்டளவிலும், பேச்சளவிலும் இருந்துவிடக் கூடாதென்றுதான் இங்குநாம் வலியுறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்; ஏட்டிலும், பேச்சிலும் இருந்துவிடுவதால் எந்தப் பயனும் பெறமுடியாது; அந்த வகையில், ஏட்டிலும் பேச்சிலும் காட்டிவரும் இந்தப் போக்கை, அவர்கள், செயலிலும்—நடைமுறையிலும் காட்ட முன்வரத் தவறுவாரானால், நிச்சயம், திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்காலச் சூழ்நிலைகளுக்கேற்றவாறு கவனத்துடன் அதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான வேலைகளை மேற்கொள்ளும்;

"நாம் கேட்கிற திராவிட நாடு —தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய நான்கு மாநிலங்களையும் கொண்ட—மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபட்ட ஒரு கூட்டாட்சிதான்; அந்தத் திராவிடத் தனியரசுக் கூட்டாட்சியில் ஒன்றுபட்ட அந்த 4 மாநிலங்களுள் ஏதாவது ஒன்று, அக்கூட்டாட்சியினின்றும் விலகிப் பிரிந்து செல்ல விருப்புற்றுக் கோரினால், நிச்சயம் அதன் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டதிட்டத்திலே இருக்கிறது; எனவே 'திராவிட நாடு பிரச்சினை தீர்ந்துவிட்டது' என்று ஒரு சிலர் கூறுவாரானால் உண்மையிலேயே அது தப்புக்கணக்காகும்."

இவ்வாறு பேசிய துணைப் பொதுச் செயலாளர் மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார் :—

"தென்னாட்டின் மீது எந்த அளவுக்கு வடநாட்டவர் தங்கள் ஆதிக்கப் பிடிப்பைப் பலப்படுத்திக் கொள்ள விழைகின்றனர் என்பதை, குழுவின் அறிக்கையே நன்றாக விளக்குகிறது ;

"'பிரிக்கப்படும் மாநிலங்களில், சர்க்கார் அலுவலகங்களில், 50 சதவிகிதத்தவரை பிற மாநிலங்களிலிருந்து அமர்த்த வேண்டும்'— என்று, குழு கூறியிருக்கிறது ;

"இந்தக் கணக்குப்படி பார்த்தால், தமிழ் நாட்டில் 50 சதவிகிதத்தவர் தமிழராயிருந்தால், 50 சதவிகிதத்தவர் மராட்டியரோ—குஜராத்தியரோ — மற்றும் வடநாட்டவரோ ஆகின்றனர்; இந்த நிலைமை ஒருகாலும் நம் நாட்டில் இருக்கக் கூடாது; திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாங்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிடுகிறோம் !— 'திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் திட்டத்தை நிச்சயமாக ஒத்துக் கொள்ளாது — தங்களிடமிருக்கின்ற ஆதிக்கத்தின் காரணமாக இந்தச் சாணக்கிய வேலைகளையெல்லாம் தி மு கழகம் தூள் தூளாக்கும்'—என்பதை ; நமது மாநிலத்தில் அயல் நாட்டவர் பதவிபெறத் தேவையில்லை— அதற்கு அவசியமில்லை :

"அப்படி பிற மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்திற்குத் தேவைப்படலாம் ; எப்போது ?— நம்முடைய நாட்டின் நலனுக்குத் தேவையான வற்றைச் செய்யத் தகுதியும், திறமையும் கொண்டவர்கள் இல்லாதிருக்கும்போது ; அப்போது நாடுவோம்; இங்கு மட்டுமல்ல—உலகத்தின் எந்தெந்தப் பகுதியிலிருந்தும் மற்றவர்களை நாடுவோம்; ஆனால், நாம் அப்படிப்பட்ட நிலையில் இல்லை ; இன்றைய நிலையை எடுத்துக் கொண்டால்கூட, டாக்டர் இலட்சுமணசாமி, வி. கே. மேனன் போன்ற பெரும் பெரும் அரசியல் நிபுணர்களெல்லாம் யார்? எங்குள்ளவர்கள் ?—நமது தென்னாட்டவர்தான் ; அப்படிப்பட்டவர்களைக் கொண்டுள்ள நமக்கு, பிறநாட்டவரது உதவி எவ்வகையிலும் தேவை இல்லையே! எனவேதான், 'இந்த முறை, வடநாடு தனது ஆதிக்கத்தை நம்மீது வலுப்படுத்துவதற்குத் தயாரித்து வைக்கும் திட்டம் —நம் உரிமையைப் பறித்துப் பாழாக்கும் செய்கை' என்று எடுத்துக்காட்டுகிறோம் ;

மத்திய பல்கலைக் கழகம் ஏன்?

"அடுத்து, தென்னாட்டிற்கு, ஒரு மத்திய பல்கலைக் கழகம் இருக்க வேண்டுமாம்! ஏன்? சென்னை பல்கலைக் கழகத்திற்கு மதிப்பு இல்லாமற் போய்விட்டதா? சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தரான டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்களே கூட கூறியிருக்கிறார் — 'நான் இந்தியாவின் எல்லா பாகங்களுக்கும் சென்றிருக்கிறேன்—அங்கெல்லாம் உள்ள பல்கலைக் கழகங்களையும் பார்வையிட்டிருக்கிறேன் ; ஆனாலும், இந்தியாவிலேயே தலை சிறந்த பல்கலைக் கழகம் ஒன்று உண்டென்றால், அது, சென்னை பல்கலைக் கழகம்தான்'—என்று! இப்படிப்பட்ட பெருமதிப்புக் கொண்ட சென்னை பல்கலைக் கழகம் இருக்கும்போது வேறொரு பல்கலைக் கழகம் இருக்கவேண்டுவது என்ன அவசியத்திற்காக?

முளையிலேயே கிள்ள வேண்டும்!

"இத்துடனும் விடவில்லை குழு; அந்த மத்தியப் பல்கலைக் கழகத்தில் இந்தியையும் புகுத்த வேண்டும் என்று சிபாரிசும் செய்திருக்கிறது! ஏன் என்று காரணமும் கூறுகிறார்கள்—'இந்தியாவின் எல்லா மக்களையும் 'பரந்த கண்ணோட்ட'த்துடன் பார்ப்பவர்கள் நாங்கள் ; அதனால்தான் அவ்வாறு சொல்லுகிறோம்'—என்று கூறியிருக்கின்றனர். இதிலிருந்து

(3-ம் பக்கம் பார்க்க)

மராட்டிய, சீக்கிய தலைவர்கள் போர்க்கொடி!

'நாங்கள் ஏமாறமாட்டோம்'

'பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டியம் பெற்றே தீருவோம்'

புதுடில்லி, அக். 16—

'மராட்டிய மண்டலம் பெரும் கொந்தளிப்பைச் சந்திக்கலாம்' என்று கூறத்தக்க அளவில், 'சம்யுக்த மராட்டிய மாநில' அமைப்புக்காக மராட்டியத் தலைவர்கள் 'போர்க் குரல்' கொடுத்து வருகின்றனர்.

'பம்பாய் இல்லாத மராட்டியம் அமைவதைக் காட்டிலும், பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மராட்டியம் அமைவதற்காக, சிறிது காலதாமதமாயினும் பொறுத்துக்கொள்வோமே தவிர, பம்பாயை விடமாட்டோம்' என, அந்தத் தலைவர்கள் சங்கநாதம் செய்த வண்ணமிருக்கின்றனர்.

மாநிலக் குழுவின் அறிக்கை குறித்து விவாதிப்பதற்காக, மராட்டிய 5 காங்கிரஸ் தலைவர்களடங்கிய தூதுக் குழுவினர், காங்கிரஸ் மேலிடத்தாரைச் சந்தித்துப் பேசுவதற்காக டில்லி வந்துள்ளனர். போர்க்களம், தற்காலிகமாக டில்லிக்கு மாற்றப்பட்டிருக்கிறது

மராட்டிய தலைவர்கள், பிரதமர் நேரு, உள்நாட்டமைச்சர் பண்டித பந்த், காங்கிரஸ் தலைவர் தேபர் ஆகியோரைச் சந்தித்து, சுமார் எட்டு மணி நேரம் விவாதிப்பர் என்றும் தெரிகிறது.

காங்கிரஸ் முன்னாள் பொதுச் செயலாளரான சங்கர ராவ் தேவ், பம்பாய் ரெவினியூ மந்திரி பி. எஸ். ஹிரே, மராட்டிய காங்கிரஸ் தலைவர் தியோகிர்கார், ஸ்தல நிர்வாக இலாகா மந்திரி ஒய். பி. சவான், இந்தியப் பேரரசின் முன்னாள் மந்திரி என். வி. காட்கில் ஆகிய ஐவரும் தூதுக் குழுவில் இருப்பர்.

முதல் நான்கு பேர்களும் ஏற்கனவே டில்லி வந்துவிட்ட நிலையில் துவக்கப் பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

தியோகிர்கார், 'சம்யுக்த மராட்டியம், மராட்டியரின் ஒருமுகமான கோரிக்கையாகும்; அந்த மராட்டியம் அமைக்குமாறு காங்கிரஸ் மேலிடத்தை வற்புறுத்துவோம்,' என்று தெரிவித்திருக்கிறார்.

மேலும், அவர் கூறியதாவது:—

"பம்பாய் பிரதேச காங்கிரஸ் என்ற பெயரில் ஒரு பிரதேசக் காங்கிரஸ் தனியாக நீண்டகாலம் இருந்துவருவதை ஒட்டி, மராட்டியர், பம்பாயைக் கேட்பது காலங் கடந்த சிந்தனையின் விளைவு என சிலர் வாதிட முற்படுகின்றனர்;

"சுதந்திர இயக்கத்தின் நிர்வாக வசதி கருதி, அப்படி ஒரு பிரதேச காங்கிரஸ் அமைத்துக்கொள்வதை, மராட்டியர் அன்று எதிர்க்கவில்லை; ஆனால், அதே நிலையை எங்களுக்கு எதிராகத் திருப்ப எவரும் முனைவரேயானால், நாங்கள் அதனால் ஏமாந்துவிடமாட்டோம்."

'சீக்கியர் அடிமையாக்கப்படும் கொடுமை களைவோம்'

'பஞ்சாப் மொழிவழி மாநிலம் அமைப்போம்'

அமிர்தசரஸ், அக். 16—

"சிறுபான்மை மக்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்குச் சுதந்திரம், பாதுகாப்பு ஆகிய உணர்வுகளை ஊட்டவுமான பெரும் பொறுப்பு இந்தியப் பேரரசிற்கு உண்டு;

"ஆதிக்க வெறிகொண்ட வகுப்புவாத கோஷ்டி ஒன்றுக்கு, சீக்கியர்களின் கைகளையும்—கால்களையும் பிணைத்து, அடிமைகளாக்கித் தந்துள்ள மாநிலக் குழு, சீக்கியர்களுக்குப் பெரும் அநீதி இழைத்துவிட்டிருக்கிறது;

"எனவே இந்தியப் பேரரசு, வடமேற்கு இந்தியாவைப் பொறுத்த மட்டில்—மாநிலக் குழுவின் சிபாரிசை ஏற்றுக்கொள்ளக் கூடாது,"

—என்று, சீக்கியர்களின் மாநாடு ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

காங்கிரஸ் சார்புடைய சிரோமணி கால்சா தளம் என்ற ஒரு நிறுவனத்தைத் தவிர, ஏனைய எல்லா சீக்கிய நிறுவனங்களும் ஒன்றுகூடி, மாநாடு ஒன்று நடத்தியிருக்கின்றன.

மாநாட்டிற்கு அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங் தலைமை தாங்கியிருக்கிறார்.

'பஞ்சாபி மொழி வழி மாநிலம் அமைத்தே தீரவேண்டும்' என்றும், அதற்கான பேச்சு வார்த்தைகளை தொடர்புடையோருடன் மேற்கொள்ள மாஸ்டர் தாராசிங்கிற்கு அதிகாரம் வழங்கியும், தீர்மானம் நிறைவேறியுள்ளது.

வரும் நவம்பர் 10-ந் தேதியன்று, 'மாநிலக் குழு சிபாரிசு எதிர்ப்பு நாள்' கொண்டாடுமாறும், அன்று, பொதுக்கூட்டங்கள் நடத்தி, சிபாரிசுகள், சீக்கியர்களுக்கு விளைவிக்கும் கேடுகள் குறித்து மக்களுக்கு விளக்கம் தருமாறும், தாராசிங், சீக்கிய நிறுவனங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"பஞ்சாப், பெப்சு, இமாசலப் பிரதேசம் ஆகியவற்றைச் சேர்த்து 'மகாபஞ்சாப்' அமைப்பது என்பது, சீக்கியர்களுக்குத் தீட்டப்படும் சாவோலையாகும்; எனவே, பஞ்சாபி மொழிவழி மாநிலம் அமைக்க, நாம் பெரும் போராட்டத்தில் ஈடுபடுமுன், எல்லா வகையிலும் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளுவோம்,"

என்றும் மாஸ்டர் தாராசிங் முழங்கியிருக்கிறார்.

மாநாட்டில், பிரதிநிதிகளாக மட்டும் 1,500 பேருக்கு மேலாக பல்வேறு சீக்கிய நிறுவனங்களையும் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டிருக்கின்றனர்.

அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

19 புதுக்கோட்டை

20 காலை: புதுக்கோட்டை கல்லூரி;
மாலை: திருப்பத்தூர் (இராமநாதபுரம் மா.)

21 நாகர்கோயில் - சிறப்புச் சொற்பொழிவு

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் விளக்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களது திருட்டு எண்ணத்தை நாம் தெரிந்துகொண்டுவிட்டோம்; இதை நீடிக்கவிடாமல், முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டியவர்களாக இருக்கிறோம்;

'முடிச்சு'க்களை அறுத்தெறிவோம்!

"நாம் இப்போதே அவர்களுடைய இந்த எண்ணத்தைத் தகர்த்தெறிய வேண்டும்; நமக்கும்—அவர்களுக்குமிடையே இதுவரையிலும் போடப்பட்டிருக்கின்ற 'முடிச்சு'க்களை அறுத்தெறிய வேண்டும். அந்த 'முடிச்சு' இருந்ததால்தானே இந்தத் தொல்லைகளெல்லாம் நேருகின்றன?

"இதுவும் போதாதென்று, அக்குழு, 'மாநிலத்தில், மூன்றில் ஒரு பங்கு நீதிபதிகள், பிற மாநிலத்திலிருந்து நியமிக்கப்பட வேண்டும்' என்றும் கூறியிருக்கின்றனர்; இதை நம்மால் சகித்துக்கொள்ள முடியாது; எனவேதான், நாம் கூறுகிறோம் — 'அவர்களுக்கும் நமக்குமிடையே உள்ள முடிச்சுக்களை அறுத்தெறிய வேண்டும்'— என்று! அவர்களுடன் தமக்குள்ள தொடர்பை விட்டுவிட்ட பர்மா, இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இந்தியப் பேரரசு இந்த மாதிரி கேட்க முடியுமா?—முடியாதே! ஏனெனில், அவைகளெல்லாம் இந்தியப் பேரரசின் கையில் இல்லை; எனவே, அவைகளிடம் இந்த விதமாகக் கேட்கும் வலுவும் இந்தியப் பேரரசுக்குக் கிடைக்காது; ஆனால், நம்மிடம் இதைக் கூறுகிறதென்றால், அதற்கு இந்த 'முடிச்சு'தான் காரணம் என்பதை உணர வேண்டும்;

"திராவிட நாடு பிரிந்துவிட்டால், உண்மையிலேயே, ஐ. நா. சபையில் நமது முழக்கம் கேட்கும்—அங்கு நமது குரல் கேட்கும்; நமது திராவிடத் தோழர்கள் பேசுவார்கள்;

"எனவே, நம்முடைய இந்த நியாயமான — உரிமையான வேண்டுகோளை இந்தியப் பேரரசு கவனிக்கத் தவறிவிட்டதை எடுத்துக்காட்டுகிறோம்; நம் இயக்கத்தைப் பற்றி விரைவிலேயே மாஸ்டர் தாராசிங் உணர்ந்துகொள்ளத்தான் போகிறார்; மராட்டியரும், கன்னடியரும் தங்களது கண்களைத் திறந்து, நமது கோரிக்கையின் நியாயத்தையும்—வடநாட்டு ஆதிக்க சர்க்காரின் அநியாயத்தையும் ஆதிபத்தியத்தையும் உணரத்தான் போகின்றனர்;

"எனவே, நமது நாட்டிற்கு, மாநிலக் குழுவின் மூலமாக வடநாடு இழைத்துள்ள அநீதியைத் துடைக்க திராவிட முன்னேற்றக் கழகம் தனித்திருந்து வேலை செய்யும்; அந்த அநீதி துடைக்கும் பணியில் மற்றக் கட்சிகள் சார்பில், நேர்மையான முறையில் கமிட்டிகள் ஏற்பட்டாலும் தி. மு கழகம் அதில் பங்கேற்றுக் கொள்ளும்;

"மாநிலக் குழுவின் அறிக்கையை ஒட்டி வடநாட்டுப் பகுதிகளில் ஏற்பட்ட சீர்குலைவுகளையும், சச்சரவுகளையும் கண்ட மத்திய அரசாங்கம், அங்குள்ள குஜராத்தி, பஞ்சாபி, மராட்டியர் தலைவர்கள் போன்ற எல்லாரையும் ஒருமித்து அழைத்து, தகராறுகளைத் தீர்த்துவைத்து, பிரச்சினைகளுக்கு முடிவு காணப்போவதாக மத்திய சர்க்கார் அறிவித்திருக்கிற செய்தியை நாம் படிக்கிறோம்; அந்த அளவிற்கு வடநாட்டைப் பொறுத்தவரையில் சச்சரவுகளைச் சமாளிக்க முன்வந்த மத்திய சர்க்கார், ஏன் நமது தென்னாட்டைப் பொறுத்த பிரச்சினைகளில் மட்டும் மவுனம் சாதிக்கிறது? உண்மையிலேயே நாட்டின் நலனில் அக்கரை கொண்டதாக அந்த சர்க்கார் இருக்குமானால், இந்தப் பிரச்சினைகளையும் அம்முறையில் தீர்க்க முன்வந்திருக்க வேண்டும்; அதுதான் மிக மிக நலமாகவும் இருக்கும்; ஆனாலும் செய்யத் தவறுகிறது."

மேலும் தோழர் என். வி. நடராசன் குறிப்பிட்டார்:—

கண் திறப்பார்கள்!

"கேரள மொழி பேசும் மாநிலம் 'கேரள'மாக அழைக்கப்படுகிறது; ஆந்திர மொழி பேசப்படும் மாநிலம் 'ஆந்திர', மாநிலமாக அழைக்கப்படுகிறது; கன்னட மொழி பேசப்படும் மாநிலம் 'கன்னட' மாநிலமாக அழைக்கப்படுகிறது; ஆனால், தமிழ் மொழி பேசப்படும் இந்த மாநிலமோ, 'தமிழ்' மாநிலமாக அழைக்கப்படவில்லை; அது 'சென்னை மாநில'மாம்! தமிழர்களை ஏமாந்தவர்கள் என்று நினைத்துவிட்டிருக்கிறார்கள் என்பதே இதிலிருந்து தெரியவில்லையா?

"சென்னை மாநிலத்தைத் 'தமிழ் மாநிலம்' என்றழைப்பது எவருக்குப் பொருந்தாதது?—எவருக்குப் பிடிக்காதது? இது எல்லோருக்கும் ஏற்ற ஒன்றாக இருக்கும்போது, அதை ஏன் செய்யத் தவறிவிட்டது?

"'மொழி மாநிலக் கோரிக்கைக்காகப் போராடுவோம்'—என்று கூறிய காங்கிரசார், இன்று, வெளியே தலைகாட்டாமல் பதுங்கிக் கிடப்பதேன்? தங்கள் சொல்லை இன்று மறுப்பதேன்? 'இந்திய யூனியனை' ஒற்றுமைப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தினாலேதானே அவ்வாறு தங்கள் முன்னாள் கூறியதை மறந்தும், மறைத்தும் வருகிறார்கள்?

"நாம் திட்டவட்டமாகக் கூறிவிடுகிறோம் — 'தமிழகம்' என்ற பெயருடன், அதில் சேர வேண்டிய பகுதிகள் சேர்ந்தே ஆகவேண்டும்; சித்தூர், திருத்தணி, பொதட்டூர்பேட்டை ஆகியவை பற்றியப் பிரச்சினையில் நியாயம் கிடைக்கவேண்டும்; பஞ்சாப் மொழி மாநிலம் அமைத்தே ஆகவேண்டும்; உ. பி. வலுமிக்க ஒன்றாக இருப்பது கண்டிக்கப்படவேண்டும்; இவற்றையெல்லாம் வடநாட்டுச் சர்க்கார் கவனித்து ஆவன செய்யவேண்டும்; தவறுமானால், திராவிட முன்னேற்றக் கழகம் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற பலமிக்க—ஆனால் நேர்மையானமுறையில்கிளர்ச்சிகளை நடத்தியே தீரும்;

"மொழி மாநில அமைப்பு பற்றிய பிரச்சினை எழுந்தபோது, டாக்டர் ஏ. லட்சுமணசாமி, 'தட்சிணம், உத்திரம்—இப்படி 6 பகுதிகளாக இந்தியா பிரிக்கப்படவேண்டும்,' என்றார்; 'மொழி அடிப்படையில் மாநிலங்கள் பிரிவதை எதிர்க்கிறேன்' என்றார்; அப்படி மாநிலங்கள் மொழி அடிப்படையிலேயே அமைந்தாலும் சென்னை நகரம் தமிழர்களுக்கேதான் என்றும் கூறினார்; இந்தத் தகராறுகளையெல்லாம் தீர்த்து வைக்கத்தான் மாநில புனரமைப்புக் குழுவே உருவானது; அந்த நேரத்திலே, 'உடமானவரை ஒவ்வொரு மாநிலங்களுக்கும் முழு அளவு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்' என்று கூறினார்; ஆனால், இப்போதோ வாயை மூடிக்கொண்டிருக்கின்றனர் — அவரும், அவரைப் போன்ற பிற தலைவர்களும்; இதனால்தான், நாமும், இன்றைய சூழ்நிலையில் இப்படி அவதியுற வேண்டியவர்களாக இருக்கிறோம்;

"இந்த நிலைமைகளை எல்லாம் அந்தத் தலைவர்கள் நன்முகச் சிந்தித்து உணர்ந்து, வருங்காலத்திலாயினும் நாட்டின் நலனுக்கான பிரச்சினைகளில் கவலையுடன் கவனம் செலுத்த வேண்டும்; எதிர்கால வாழ்க்கையில் முன்னேற்றத்திற்காகப் பாடுபட முன்வர வேண்டும்;

"வடக்கெல்லைப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் நாம் ஏற்கனவே வடக்கெல்லைப் பகுதிகளுக்காகப் போராடியிருக்கிறோம்; அந்தப் பகுதி, யாரிடம் சேர்ந்தாலும் நமக்குக் கவலையில்லை; நம்மிடையே — தமிழர், தெலுங்கர், கன்னடியர், கேரளர் ஆகியோரிடையே—பிணக்கு வைத்துக்கொள்ள வேண்டாம்; நாம் அனைவரும் 'ஒன்று' என்ற மனப்பாங்கு கொள்ளவேண்டும்;

"இந்தப் பிரச்சினைகளையெல்லாம் குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் தீவிரமாக ஆலோசிக்கிறது; அனைவரும்—குறிப்பாக மாணவர்களும்—தொழிலாளர்களும், தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறோம்;

"இறுதியாக, மீண்டும் வலியுறுத்த வேண்டியதெல்லாம்-தேவிகுளம், பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும்; வடக்கெல்லைப் பிரச்சினையில் இரு மாநில சர்க்கார்களும் தங்களிடையே கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும்; மத்திய பல்கலைக் கழகம் அமைக்கப் படவிடக்கூடாது; உத்தியோகம், நீதிபதி ஆகிய பிரச்சினைகளில் குழுவின் சிபாரிசுகள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது; தமிழ் மொழி பேசப்படும் நமது மாநிலத்திற்கு 'தமிழ் மாநிலம்' என்று பெயரிடப்பட வேண்டும் என்பவைதான்."

தோழர் சாதா அவர்கள் பேச

(4-ம் பக்கம் பார்க்க.)

****

மாநில மாநாடு

திருச்சியில் கூடுகிறது!

எழிலோடு! எக்களிப்போடு! விரைவில்!

★

வசதியான இடத்தில்—வகையான பந்தலில் மாநாடு கூடும்!

★

வரவேற்புக் குழுவினர்

இடம் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்!

★

கழகத் தோழர்களே! நிதி திரட்டுக!

ஆக்கந் தருக! ஊக்கம் ஊட்டுக!

பொறுப்பாளர்

தி. மு. க. தலைமை நிலையம்

****

சிங்களவர்களின் ஆகாத போக்கு!

மீண்டும் கொழும்பு கூட்டத்தில் 'கலாட்டா'!

போலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகித்தனர்

கொழும்பு, அக் 16—

கொழும்பு நகரில் மீண்டும் மொழிச் சிக்கலை ஒட்டிய குழப்பங்கள், கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன.

மக்கள் சபையில் இரண்டாவது பெரிய கட்சியாயிருக்கிற லங்கா சமா சமாஜ கட்சியினர், நகர மண்டபத்தில் கூட்டம் ஒன்று கூட்டினர்.

கொழும்பு நகரசபைத் தலைவரும் கட்சியின் தலைவருமான என். எம். பெரோரா கூட்டத்திற்குத் தலைமை தாங்கியிருக்கிறார்.

இவர், மக்கள் சபையில், 'சிங்களத்தைப்போலவே தமிழுக்கும் அரசாங்க மொழி என்ற அந்தஸ்து அரசியல் சட்டரீதியாக வழங்க வேண்டு'மெனக் கோரும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்திருக்கிறார். அது, அடுத்த கிழமையில் மக்கள் சபையில் விவாதிக்கப் படவிருக்கிறது.

கூட்டம், தமிழ் மொழிக்கும் சிங்களத்தைப்போலவே சம 'அந்தஸ்து'த் தரப்பட வேண்டுமென்பதற்கு பொது மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்காக நடைபெற்றதாகும்.

இந்தக் கூட்டத்தில், 'புத்த பிட்சு'க்கள் சிலரின் தலைமையில் உள்ளதாகச் சொல்லப்படும் சில போக்கிரிகள் கல்லெறிதல் போன்ற இழி செயலில் ஈடுபட்டனராம்.

கடந்த கிழமையில், கம்யூனிஸ்டுகள் நடத்திய கூட்டத்தின் போது ஏற்பட்ட கலவரங்களை மனதில்கொண்டு, அந்த நிகழ்ச்சி நடைபெறக் கூடாது என்பதற்காக, புத்த சன்னியாசிகள் எவரும் நகர மண்டபத்திற்குள் நுழையக் கூடாது என்று தடுக்கப்பட்டுவிட்டனராம்.

இது கண்டு ஆத்திரமடைந்த புத்த சன்னியாசி ஒருவர், கூடியிருந்த நூற்றுக் கணக்கானோரை, கூட்டம் நடைபெறுதவாறு தடுக்குமாறு தூண்டியதாகவும், அதனை ஒட்டி மண்டபத்தின் மீது கல்மாரி பொழிந்தனர் என்றும் கூறப்படுகிறது.

சுமார் 25 பேர் வரை காயம் பட்டிருக்கின்றனர்.

போலீசார் பலமுறை கண்ணீர்ப் புகைப் பிரயோகம்செய்திருக்கின்றனர்.

காற்று மண்டபத்தை நோக்கி அடித்ததால் புகையினுல் வெகுவாகப் பாதிக்கப்பட்டவர்கள், மண்டபத்திற்குள் இருந்தவர்கள்தான் என்று கூறப்படுகிறது.

தலைவர் முன்னுரையாற்றுகையில், அரசியல் சட்டத்தைத் திருத்தி தமிழுக்கும் சிங்களத்தைப் போல சம அந்தஸ்து தரவில்லையானுல், நாடு இரண்டாகப் பிரிந்துவிடும் என்று எச்சரிக்கை விடுத்திருக்கிருர். நாகலிங்கம் உட்பட கட்சித் தலைவர்கள் பலர் பேசியிருக்கின்றனர்.

ரூ. 20 கோடி கடன்

பர்மாவுக்கு இந்தியா தருகிறது

புதுடில்லி, அக் 17—

பர்மாவுக்கு ரூ 20 கோடி கடனைத் தரும் இந்தியா—பர்மா ஒப்பந்தம் இன்று கையெழுத்தாகியது.

பர்மா சர்க்கார் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ரூ. 20 கோடி முழுவதையும் கடனுகவே வழங்குவதற்கு இந்திய சர்க்கார் சம்மதித்துள்ளனர். முன்னர், ரூ 10 கோடி ரொக்கமாகவும், ரூ. 10 கோடிக்கு சாமான்களாகவும் தருவதற்கு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

இக்கடனுக்கு வட்டி 4 சதவிகிதமாகும்; அசல் தொகை 1959 மார்ச் மாதத்திலிருந்து 6 மாதத்திற்கு ஒரு முறை ரூ $2\frac{1}{2}$ கோடி விதம் தரப்படும்.

தேவிகுளம், பீர்மேடு

கோரிக்கைக்கு ஆதரவாக புள்ளிவிவரங்கள் சேகரம்

சென்னை, அக் 17—

'திரு—கொச்சியில் உள்ள தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் தமிழகத்துடன் இணைய வேண்டும்' என்ற தங்களின் கோரிக்கைக்கு ஆதரவாக, இப்போது அவை பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பதில், சென்னை சர்க்கார் ஈடுபட்டிருக்கின்றனராம்.

'இலாகாக்கள் இந்த வேலையில் ஈடுபட்டுள்ளன; அவற்றை மத்திய சர்க்காரிடம் தருவோம்; அவர்கள் முடிவுக்குப் பின்புதான், நிலப் படத்தின் தெளிவான எல்லைக்கோடுகள் வகுக்கப் பட முடியும்'

என்று, முதலமைச்சர் காமராசர் தெரிவித்திருக்கிருர்.

அவர் நிதி மந்திரி, மற்றும் இலாகா செயலாளர்களுடன் இது குறித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தியதாகவும் தெரிய வருகிறது.

வரும் அக்டோபர் 21-ந் தேதியன்று புதுடில்லியில் நடைபெறும் முதன் மந்திரிகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்பாக, காமராசர் மேற்கொண்ட ஆலோசனை இது என்று கூறப்படுகிறது.

பொதுக்கூட்டத்தில் எம். எல். ஏ. கொலை

இலட்சுமணபுரி, அக். 17—

பாராபங்கி மாவட்டத்தில் பந்தாபூர் எனும் கிராமத்தில் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கையில், ஆயுதம் ஏந்திய 500 பேர் கொண்ட கூட்டமொன்று, மக்கள் சோஷலிஸ்டு எம் எல் ஏ. அவத் சரண் வர்மா என்பவரையும், சியாராம் என்ற ஊழியரையும் தாக்கிக் கொன்றுவிட்டது.

உ. பி. சட்ட சபையில், இதுபற்றிய விவரங்களை அறிவித்த முதல் அமைச்சர் சம்பூரணனந்த், அவ்விருவரது உடல்களையும் அக்கூட்டத்தினர் தூக்கிச் சென்றுவிட்டதாகவும், போலீஸ் படை அங்கு விரைந்து சென்றிருப்பதாகவும் கூறினர்.

தகராறு மீண்டும் ஆரம்பமாகிறது?

கராச்சி, அக். 16—

புதிய மேற்கு பாகிஸ்தான் அமைக்கப்பட்டதை ஆட்சேபித்து, கராச்சியிலுள்ள தன்னுடைய தூதவரை ஆப்கன் சர்க்கார் 'வாபஸ்' பெற்றுக் கொண்டுள்ளது. ஒரு வாரத்திற்குள், அத்தூதவர் கராச்சியைவிட்டுப் புறப்பட்டுவிடுவார்.

தூதவர் உறவை துண்டித்துக் கொள்ளும் இந்நடவடிக்கைக்கு அர்த்தமில்லையென்றும், அந்தத் தூதவராலயம், காரியதரிசியின் பொறுப்பில் இயங்கும் என்றும் கூறப்பட்டுள்ளது; என்றாலும் தூதவர் உறவு குறையலாம்—அல்லது, இல்லாமலும் போய்விடலாம்.

மேற்கு பாகிஸ்தானிலுள்ள பக்துன் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்க வேண்டுமென்பது ஆப்கன் கோரிக்கையாகும்.

'பேச்சு வார்த்தைக்கு இனி இடமில்லை'

'இனி இரு நாடுகளுக்குமிடையில் பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதற்கு எவ்வித வழியும் இல்லாததால், காபூலுக்குத் திரும்பிச் செல்லுகிறேன்,' என்று, ஆப்கன் தூதவர் பூர்வாங்கமாகத் தெரிவித்துள்ளாராம்.

அண்ணுதுரை

புதுக்கோட்டை அரசர் கல்லூரிக்கு வருகை

20-10-55 காலை 10 மணிக்கு, புதுக்கோட்டை அரசர் கல்லூரி மாணவர் இலக்கிய மன்றத்தில், தோழர் சி. என். அண்ணுதுரை அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

★

திருப்புத்தூர் வருகை

20—10—55 மாலை 2-30 மணிக்கு, திருப்பத்தூரில், தோழர் அ. பொன்னம்பலனுர் தலைமையில், திருப்புத்தூர் கருணுநிதி படிப்பகத்தை, தோழர் சி என். அண்ணுதுரை அவர்கள் திறந்துவைத்து சொற்பொழிவாற்றுவார். தோழர் எஸ். முத்து பேசுவார்.

மாலை 4 மணிக்கு, ஊர்வலமும், அழகிரி படிப்பகத் திறப்பு விழாவும், ஊராண்மைக் கழக வரவேற்பும், மாலை 5-30 மணிக்கு பொதுக்கூட்டமும் நடைபெறும்.

ஃ ஃ ஃ

பொதுக்கூட்டம்

சிவகெங்கை ரோட்டுத் திடலில் 20-10-55 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு

தலைவர்: எஸ். முத்து

பேசுவோர்:

சி. என். அண்ணுதுரை

அ. பொன்னம்பலனுர்

—கருணுநிதி படிப்பகத்தார்

சேலம் மாவட்டத்தில் அண்ணுதுரை

சுற்றுப்பயணம்

"தோழர் சி. என். அண்ணுதுரை அவர்கள், நவம்பர் மாதம் 20, 21, 22, 23 ஆகிய தேதிகளில், சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்ய இசைந்துள்ளார். கூட்டம் நடத்த விரும்பும் தோழர்கள் மாவட்டக் கழகத்திற்கு எழுதுமாறு கேட்டுக்கொள்கிறேன்," என்று, சேலம் மாவட்ட தி. மு கழகத் துணைச் செயலாளர் தோழர் பி. இராமலிங்கம் அறிவிக்கிருர்.

திருக்குறள் வகுப்பு

19—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை—புரசைபாக்கம், எண் 100, வெள்ளாளத் தெரு, தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், தோழர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

ஃ ஃ ஃ

19—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை-இராயபுரம், எண் 59 மன்ஞர்சாமி கோயில் தெரு, வடசென்னை குறள் நெறிக் கழக அறையில், தோழர் கி. தியாகராசன் அவர்களால் குறள் வகுப்பு நடத்தப்பெறும்.

மராட்டியரிடம் காங்கிரஸ் தலைவர்கள் பேரம்!

பம்பாயை மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்திற்கு ஆளாக்குவார்களாம்!

புதுடில்லி, அக். 17—

'பம்பாயைத் தலைநகராகக்கொண்ட சம்யுக்த மாராட்டிய மாநிலம் வேண்டும்' என்று கோரி, பார்க்கொடி உயர்த்தியுள்ள மராட்டியத் தலைவர்களிடம், காங்கிரஸ் மேலிடத்தவர் இப்போது பேரம் பேசுவதில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

'குழுவினர் செய்துள்ள சிபாரிசுப்படி, பம்பாய் மாநிலம் ஒரு ஐந்தாண்டுக் காலத்திற்கு இயங்குமாறு அனுமதித்து, பின்விளைவுகளைக் கணக்கிலெடுத்துக்கொண்டு, மீண்டும் சிக்கலைப் பரிசீலிக்க அனுமதிக்கவேண்டும்—அல்லது பம்பாய் நீங்கிய விதர்ப்பம், ஐதராபாத்திலுள்ள மாரத்வாடா பகுதிகளடங்கிய சம்யுக்த மாராட்டியம் அமைவதை ஏற்றுக்கொள்ளவேண்டும்—பம்பாய் மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்திற்குட்பட்டதாக ஆகிவிடும்'—என்று காங்கிரஸ் மேலிடத்தின் பெருந் தலைவர்களான பண்டித நேரு, பண்டித பந்த், தேபர் ஆகியோர் மாராட்டியத் தலைவர்களுக்குத் தெரிவித்திருக்கின்றனராம்.

சங்கர்ராவ் தேவ் தலைமையில் சென்றுள்ள மராட்டியத் தூதுக் குழு மீண்டும் புதனன்று காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதாகக் கூறியிருக்கின்றனராம்.

பெல்காமில் கண்ணீர்ப் புகைப் பிரயோகம்

பெல்காம், அக். 17—

திலகர் சதுக்கத்தில், இன்று காலை, குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்வதற்காக நடைபெற்ற கூட்டத்தில், ஒரு பிரிவினர் கற்களை வீசியெறிந்ததின் விளைவாக பல போலீசார் காயம் அடைந்தனராம்; கண்ணீர்ப் புகையைப் பிரயோகித்துப் போலீசார் அக்கூட்டத்தைக் கலைத்துள்ளனர்.

கழகக் கூட்டம்

★

சென்னை (திருவல்லிக்கேணி) 41-வது வட்ட தி. மு. கழகத் துவக்க விழா

வெங்கடரங்கம் பிள்ளை தெருவில் (1. 2 பஸ் நிலையத்தருகில்)

20—10—55 மாலை 6 மணிக்கு

கொடியேற்றுபவர்: அலமேலு அப்பாதுரை

திறப்பாளர்: கா. அப்பாதுரை

தலைவர்: இளம்பரிதி

பேசுவோர்: சி. பி. சிற்றரசு

இ ஏ முகிலன், ம மோகன், எம் கே ராசமாணிக்கம், முனுசாமி, எம். ஏ மணி, மா. செ த மூர்த்தி

சென்னை 2-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு

19—10—55 மாலை 6-30 மணிக்கு, சென்னை-இராயபுரம், கல்மண்டபம் போலீஸ் நிலையத்துக்குப் பின்புறமுள்ள கொழும்பு உணவு விடுதி மாடியில், சென்னை 2 வது வட்ட தி மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

பாக். பிரதமர் திடீர் முடிவு

கராச்சி, அக் 17—

பாகிஸ்தான் பிரதமர், தன்னுடைய அமைச்சரவையை இன்று திடீரென மாற்றி அமைத்துள்ளார்.

தன்னுடைய பொறுப்பிலிருந்த நிதி இலாகாவை கைவிட்டு, காஷ்மீர விவகார இலாகாவை தம்முடைய பொறுப்பில் மேற்கொண்டுள்ளார்.

என். வி. என். விளக்கம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கையில், திராவிட நாட்டுப் பிரச்சினைக்கு மாநிலக் குழுவின் அறிக்கையில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதைக் கண்டித்தும், அப்பிரச்சினையைத் தீர்க்கும் முறையில் போராட்டம் நடத்தியே ஆகவேண்டுமென்பதைக் குறிப்பிட்டும், 'தமிழ் மாநிலம்' என்று சென்னை மாநிலத்திற்குப் பெயரிடாமல் இருப்பது குறித்துக் கண்டனமும் தெரிவித்தார்.

மேலும், நமது கோரிக்கையைப் புறக்கணித்து, நம்மை ஒடுக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அச்சுறுத்தி விடுவதால் நாம் ஓய்ந்துவிடப்போவதில்லை என்றும், எவ்வகையிலும் போராட்டம் நடத்தியே தீருவோம் என்றும், நமது போராட்டத்தில் நம்பால் நியாயம் இருப்பதையும் விளக்கினர்.

நிகழ்ச்சிகள்

தி மு கழக மாநில மாநாட்டு நிதிக்காக, சென்னை கோகலே மண்டபத்தில், 16—10—55 காலை 10 மணியளவில் ஒரு சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது

கூட்டத்திற்குத் தோழர் அ. பொ. அரசு தலைமை வகித்தார்.

கூட்டத் துவக்கத்தில் தோழர் இரா. சண்முகம் இயக்கப் பாடல் பாடினர்.

பின்னர், தோழர்கள் முகவை ஆர் எஸ் பாண்டியன், சுரதா ஆகியோர் சிறிதுநேரம் சொற்பொழிவாற்றிய பின், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கைகள் பற்றித் தி மு கழகத்தின் கருத்துக்களை விவரித்து நீண்டதோர் உரையாற்றினர்.

இறுதியில் சுமார் பகல் 1-மணிக்கு, தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

'மொழிவழி அடிப்படையிலேயே மாநிலங்களை திருத்தி அமைத்திருக்க வேண்டும்'

குழு அறிக்கை குறித்து பஞ்சாப்ராவ் தேஷ்முக்

மங்களூர், அக். 17—

"தர்க்கரீதியாக நோக்கும்போது, மாநிலக் குழுவின் அறிக்கை நியாயமானதாகத் தெரியவில்லை; "எல்லைகளை நிர்ணயிப்பதற்கு மாவட்டவாரிப் பிரிவினையைத்தான், கொள்கையாகக் கொள்ள வேண்டுமென்பதை குழுவினர் அனுசரிக்கவில்லை; சில இடங்களில் தாலுகாக்களையும்கூட, நிர்வாக வசதி என்ற காரணத்தைக் காட்டி, பிரித்துவிடுமாறு சிபாரிசு செய்துள்ளனர்; "மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்கு மொழிவழியையே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்; இப்போதுள்ள அரசியல் எல்லைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடாது," என்று, மத்திய சர்க்கார் உணவுத் துறை அமைச்சர் டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிருர்.

'கர்நாடக மாநிலத்தில் காசர்கோடு தாலுகா இருக்க வேண்டும்—என்ற கன்னடியர் கோரிக்கை நியாயமானதே' என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.